சுருக்கம்

பழங்குடியினர் நலம் - 2023 2024 ஆம் ஆண்டு - பழங்குடியினர் மக்களுக்கான வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டம் - அரசு சாரா தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுத்துதல் - அரசு சாரா நிறுவனங்களை தேர்ந்தெடுக்க அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் [ப.மே1(2)] துறை

அரசாணை (நிலை) எண். 76

நாள் 21.06.2023
சோபகிருது, ஆனி மாதம் 6-ஆம் நாள்.
திருவள்ளுவர் ஆண்டு 2054
படிக்கப்பட்டது

இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை - 5 அவர்களின் கடிதம் ந.க.எண்./பமே.அ3/3658/2023, நாள் 20.06.2023

.......

ஆணை:-

2023-2024-ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகளில் மாண்புமிகு அமைச்சர் (ஆதிந) அவர்களால் கீழ்க்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது.

"பழங்குடியினரின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக தேனீ வளர்ப்பு, மருத்துவ மூலிகை வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, இயற்கை மிளகு விளைவித்தல், கோட்டா பானை தயாரித்தல், காளான் வளர்ப்பு, மூங்கில் தளவாடங்கள் தயாரித்தல், துரித உணவகங்கள் அமைத்தல் மற்றும் நரிக்குறவர்களுக்கான பிரத்யேகமான கட்டமைப்புகள் போன்ற வருவாய் ஈட்டும் திட்டங்கள் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து ரூ.10.00 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்".

2. மேற்காணும் அறிவிப்பு தொடர்பாக மேலே படிக்கப்பட்ட பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதத்தில், வருவாய் ஈட்டும் திட்டங்கள் நிலைத்து பலன் தராமல் இருக்கும் நிலையில் பழங்குடியின மக்கள் அரசு திட்டங்களின் மூலம் உரிய பலன் பெற இயலாத நிலை உள்ளது என்றும், மேலும் உரிய தகுதி வாய்ந்த நபர்களை தேர்வு செய்வதிலும் இடர்பாடுகள் ஏற்படுகிறது என்றும், அப்பகுதியில் வாழும் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் அனைத்து பழங்குடியின மக்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் தேவைகள் குறித்து கணக்கெடுத்து முற்றிலும் தகுதி வாய்ந்த நபர்களுக்காக பொருளாதார திட்டங்களை செயல்படுத்தி வருவதாக அறியப்படுகிறது என்றும் எனவே ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அங்கு வாழும்

பழங்குடியினர் மக்களுக்கு வாழ்வாதாரத்திற்கான திட்டங்களை நிலையாக இருக்கும் வகையில் அமைக்க அம்மாவட்டத்தில் இருக்கும் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மூலமாக வாழ்வாதார திட்டங்களை செயல்படுத்துதல் என்பது ஏற்புடையதாக இருக்கும் என்றும் மேலும், பழங்குடியினருக்கான வாழ்வாதார திட்டங்களை தொண்டு நிறுவனங்கள் மூலம் கீழ்கண்ட இரு விதங்களில் செயல்படுத்திடலாம் என தெரிவித்துள்ளார்.

1. வாழ்வாதார திட்டங்களுக்கான அரசின் நிதியினை மானியமாக தொண்டு நிறுவனத்திற்கு அளித்து திட்டத்தினை செயல்படுத்திட அனுமதி வழங்கி நீடித்த பயன்பெறும் வகையில் பயனாளிகளை தொடர்ந்து கண்காணித்திட அனுமதி வழங்கிடலாம்.
2. திட்டங்களுக்கான நிதியினை பயனாளிகளுக்கு அளித்து திட்டம் நீடித்து செயல்படுவதை தொண்டு நிறுவனம் மூலம் கண்காணிக்கலாம். இதற்கான நிர்வாக செலவீனத்தினை மட்டும் இத்தொண்டு நிறுவனத்திற்கு வழங்கலாம்.

3. மேலும், பழங்குடியின மக்களின் சமூக பொருளாதார நிலையினை மேம்படுத்துவதற்கும், வாழ்வாதார செயல்பாடுகளை உயர்த்துவதற்கும் திறன் மற்றும் மேம்பாட்டு பயிற்சிகள், வருமானத்தை மேம்படுத்தும் திட்டங்கள் போன்ற செயல்பாடுகளின் மூலம் பழங்குடியினர் மக்களின் வாழ்க்கைத் திறன் நிலையானதாக இருக்கும் வகையில் மேற்காண் திட்டங்களை செயல்படுத்துவதற்கு உரிய தகுதி வாய்ந்த நபர்களை தேர்வு செய்ய தன்னார்வு தொண்டு நிறுவனங்கள், அரசு அமைப்புகள் மற்றும் அரசு உதவி பெறும் கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் பழங்குடியினரால் பிரத்தியேகமாக நடத்தப்படும் கூட்டுறவு சங்கங்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை பட்டியலிடுதல் (Empanel) இன்றியமையாததாகும் என்றும் அந்நிறுவனங்களில் கீழ்க்கண்ட மதிப்பீட்டு அளவுகோலின் அடிப்படையில் தகுதி வாய்ந்த நிறுவனத்தினை பட்டியலிடும் பொருட்டு கீழ்கண்டவாறு தேர்ந்தெடுக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

| வ எண் | அளவுரு | வரம்பு | மதிப்பெண்கள் | அதிகபட்ச மதிப்பெண்கள் |
|---|---|---|---|---|
| 1 | கடந்த 2 ஆண்டுகளில் (2021 - 2022 முதல் 2022 - 2023) வரை ஆண்டு சராசரி விற்று முதல் | விற்பனைவீதம் < 50 லட்சங்கள் | 0 | 10 |
| | | விற்பனைவீதம் > 50 லட்சங்கள் & < 75 லட்சங்கள் | 3 | |
| | | விற்பனைவீதம் >75 லட்சங்கள் & < 1 கோடி | 6 | |
| | | விற்பனைவீதம் > 1 கோடி | 10 | |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | உள்கட்டமைப்பு (அலுவலக வளாகம்) மாநில அளவில் | ஆம் / இல்லை | 5/0 | 15 |
| | மாவட்ட அளவில் | ஆம் / இல்லை | 5/0 | |
| | மண்டல அளவில் | ஆம் / இல்லை | 5/0 | |
| 3 | தற்போதுள்ள அனுபவம் வாய்ந்த நிபுணத்துவ பணியாளர்களின் எண்ணிக்கை | அனுபவம் வாய்ந்த ஊழியர்கள் இல்லை | 0 | 20 |
| | | வாழ்வாதாரம், விவசாயம், தோட்டக்கலை மற்றும் திறன் மேம்பாடு தொழில்முறை பட்டதாரி (< 2) | 5 | |
| | | வாழ்வாதாரம், விவசாயம், தோட்டக்கலை மற்றும் திறன் மேம்பாடு தொழில்முறை பட்டதாரி (> 2) | 10 | |
| | | சமூகப்பணி முதுகலை பட்டதாரி (< 2) | 5 | |
| | | சமூகப்பணி முதுகலைப் பட்டதாரி (>2) | 10 | |
| 4 | வாழ்வாதாரம், வன உரிமைச் சட்டம் 2006, பழங்குடியினரின் சமூக பொருளாதார ஆய்வு, கல்வித் தரத்தை மேம்படுத்துதல், திறன் மேம்பாடு வேலைவாய்ப்பு பயிற்சி, வருமானத்தை மேம்படுத்துதல், வீட்டுவசதி மற்றும் உள்கட்டமைப்பு அடிப்படையிலான திட்டங்களைச் செயல்படுத்துவதில் அனுபவம் | < 2 ஆண்டு | 0 | 20 |
| | | 2 - 4 ஆண்டுகள் | 4 | |
| | | 4-6 ஆண்டுகள் | 10 | |
| | | 6-8 ஆண்டுகள் | 14 | |
| | | > 8 ஆண்டுகள் | 20 | |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | பழங்குடியினர் பகுதிகளில் இத்தகைய திட்டங்களை (மேலே குறிப்பிட்டுள்ள ) செயல்படுத்திய அனுபவம் | 0 ஆண்டு | 0 | 10 |
| | | 1 - 2 ஆண்டுகள் | 2 | |
| | | 3 - 5 ஆண்டுகள் | 5 | |
| | | 6 - 10 ஆண்டுகள் | 7 | |
| | | > 10 ஆண்டுகள் | 10 | |
| 6 | தற்போது தமிழ்நாடு /மாநில அரசு துறைகளில் செயல்படுத்தி வரும் திட்டங்கள் | இல்லை | 0 | 10 |
| | | ஏதேனும் ஒரு துறை | 5 | |
| | | ஒன்றிற்கு மேற்பட்ட துறை | 10 | |
| 7 | மாநில / தேசிய / சர்வதேச அளவில் விருதுகள் அல்லது பரிசுகள் | சர்வதேச அளவில் | 15 | 15 |
| | | தேசிய அளவில் இந்திய அரசு | 10 | |
| | | தேசிய அளவில் அரசு அல்லாதது | 8 | |
| | | மாநில அளவில் தமிழ்நாடு அரசு அல்லது இதர மாநில அரசு | 6 | |
| | | மாநில அளவில் அரசு அல்லாதது | 4 | |
| | | அத்தகைய விருதுகள் இல்லை | 0 | |

4. எனவே, அரசு சாரா தொண்டு நிறுவனங்களை பட்டியலிட ஏதுவாக அவர்களின் விருப்பத்தினை பெறுவதற்கு விருப்பமுள்ள அரசு சாரா தொண்டு நிறுவனங்களை மதிப்பீடு செய்து மேற்படி அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக பட்டியலிட (Empanel) அனுமதியும் பழங்குடியினர் நல இயக்குநருக்கு அதிகாரம் அளித்தும் அனுமதி ஆணை வழங்குமாறு அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

5. பழங்குடியின நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. அதனடிப்படையில், பழங்குடியினரின் வாழ்வாதார மேம்பாட்டிற்கான மேலே பத்தி மூன்றில் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு அரசு சாரா தொண்டு நிறுவனங்களை பட்டியலிட ஏதுவாக விருப்பத்தினை

பெறவும், விருப்பமுள்ள தொண்டு நிறுவனங்களை மேற்படி அளவுகோலின் அடிப்படையில் பட்டியலிட்டு இறுதி செய்ய பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுமதியளித்தும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.லட்சுமி பிரியா
அரசு செயலாளர்

பெறுநர்:-
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-5
நகல்
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல
அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
செயலாளர் அவர்களின் தனிச் செயலர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்
(அநமு1/ஆதிந.5/ஆதிந6) துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

21.6.2023
பிரிவு அலுவலர்.
21.6.2023